தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1993 ஏப்ரல் 19, திங்கட்கிழமை.

சித்திரை 6, ஸ்ரீமுக-திருவள்ளுவர் ஆண்டு 2024.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் தலைமையில் காலை 10-00 மணி யளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு''.

எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டு. ஆனால், செய்நன்றி மறந்து வாழ்பவருக்கு எப்பொழுதும் நல்வாழ்வு இருக்காது.

1. வினாக்கள்— விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 381, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

381—

சாணார்பட்டி துணைப் பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டிடம்.

*11538—திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார்பட்டியில் இயங்கி வரும் துணைப் பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சாணார்பட்டி சார்பதிவகம் கட்ட நிலம் இதுவரையிலும் கையகப்படுத்தப்படவில்லை. நிலம் கையகப்படுத்துவதற்கான

முயற்சிகளிலே ஈடுபடுகிறோம். நிதிநிலைமைக்கு ஏற்றவாறு சாணார்பட்டி தொகுதியில் சார் பதிவகம் அலுவலகம் கட்டுவதற்கு அரசு வேண்டிய முயற்சிகளைப் படிப்படியாகச் செய்யும்.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் நிதிநிலைமைக்கு ஏற்ப படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று சொல்கிறார்கள். அங்கே பல ஆண்டுக்காலத்திற்கு முன்பு கட்டப்பட்ட அந்தக் கட்டிடம் பாழடைந்த நிலையில் இருக்கின்றன. அங்கே இருக்கக் கூடிய தஸ்தாவேஜுகள் பாதுகாப்பின்றி இருக்கின்றன. எனவே, மீண்டும் இந்த ஆண்டே பரிசீலனை செய்து, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது வாடகைக் கட்டிடத்தில் இருக்கிறது. பழுதடைந்து இருந்தால், வாடகை உரிமையாளரிடம் அதைச் சரிசெய்து எல்லா இடத்திலும் வாங்கிக் கொள்கிறோம். அப்படி இல்லை என்றால் வாடகைக் கட்டிடத்தை உடனே மாற்றிவிடுகிறோம். இந்தக் குறிப்பிட்ட கட்டிடத்திற்கு 300 ரூபாய் வாடகை கொடுக்கிறோம். சாணார்பட்டியிலே கட்டிடம் கட்ட நிலம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. இந்த இடம் சரியாக இல்லாவிட்டால் வேறு கட்டிடம் வாங்கிக் கொள்ளலாம் எனவே, அங்கே விரைவிலே புதிய கட்டிடம் கட்டுவதற்கு முயற்சி செய்வோம்.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, அங்கே நிறைய அரசாங்க புறம்போக்கு நிலம்—அரசு நிலம் இருக்கிறது. அந்த நிலத்தைக் கையகப்படுத்தி துரிதமாக கனம் அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே அதற்கு ஏற்பாடு செய்து, துரித நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலம் மட்டும் பிரச்சினை அல்ல. நிதியும் பிரச்சினையாக இருக்கிறது. இதுவரையிலும் நம்முடைய பதிவுத்துறைக்கு 586 அலுவலகங்கள் இருக்கின்றன. அவற்றில், 288 அலுவலகங்கள் அரசுக் கட்டிடத்தில் இருக்கின்றன. நீண்டகாலமாக இதை யாரும் கவனிக்காமல் விட்டுவிட்டார்கள். 298 அலுவலகங்கள் தனியாருடைய கட்டிடத்தில் வாடகைக்கு இருக்கின்றன. இந்த அரசு வந்ததற்குப் பிறகு 33 இடங்களிலே கட்டிடம் கட்டுவதற்கு முடிவு செய்து 23 இடங்களிலே கட்டிடம் கட்டுவதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டு இருக்கிறோம். ஆகவே, அங்கே கட்டுவதற்கு முயற்சி செய்வோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 3[illegible]—

திரு. ஆர். தங்கராசு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.